1973 ஆகஸ்ட் 7]

செய்வதற்காகவென்று ஒரு தனித் தொழிற்சாலை நிறுவ வேண்டிய அவசியம் இதுவரை உணரப்படவில்லை.

Seminar on linking of Cauvery with Ganges

* 58 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Irrigation Engineers of the State Government have submitted any papers to the Seminar on the Scheme for linking of Cauvery with Ganges held in Delhi during January 1973; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) இம்மாநில பாசனப் பொறியாளர்களால் இக்கருத்தரங்கில் இரு தொழில்நுட்ப ஆய்வு அறிக்கைகள் அளிக்கப்பட்டன. இத்தொழில் நுட்ப ஆய்வு அறிக்கைகளில் அடங்கியுள்ள முக்கிய விவரங்களாவன :—

(1) கோதாவரி நதியின் குறுக்கேயுள்ள போச்சம்பாடு நீர்த்தேக்கம் பாசன வசதி பெறும் வகையில் மாற்றுத் திட்டம் ஒன்றிற்கான ஏற்புடைமை ஆய்வுகள் செய்யப்படுதல்; இதனுல் கீழுள்ள பகுதிக்கு நீரை இறைத்து அனுப்புவது தவிர்க்கப்படும்.

(2) காவிரியை கோதாவரி, கிருஷ்ண ஆகிய நதிகளுடன் இணைக்கும் வேலையை முதல் கட்டத்திலேயே மேற்கொள்ளலாம். இப்பாசனப் பகுதியில் நீரை இறைத்து அனுப்ப வேண்டிய தேவையில்லாததாலும் கால்வாய் வெட்டும் வேலை முன்னேறிக் கொண்டு வருகையிலேயே இதனுல் பயனடையலாம் என்பதாலும் மேற்படி வேலையை முதல் கட்டத்திலேயே மேற்கொள்ளலாம்.

(3) கேரள மாநிலத்தில் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் உபரி நீரை காவிரிக்குத் தென்புறமிருக்கிற பகுதிகள் பயனடையும் வகையில் கிழக்கு நோக்கித் தமிழகத்திற்குத் திருப்பி விடுதல்.

திரு. என். கே. பழனிசாமி: இந்தக் கருத்தரங்கில் கங்கை-காவிரி இணைப்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டால், தமிழ் நாட்டிற்குக் கிடைக்கக்கூடிய தண்ணீர் குறைவாக இருக்கும் என்ற ஒரு அபிப்பிராயம் சொல்லப்பட்டதா ?

[1973 ஆகஸ்ட் 7

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அப்படிச் சொல்லப்படவில்லை. தமிழ்நாட்டிற்கு லாபகரமாக இருக்கும்.

THIRU A. SUBRAMANIAM: In December last, the U.N. Team has studied the project and according to the Union Irrigation and Power Minister, Dr. K. L. Rao's statement before the Consultative Committee of Parliament in January last, the team was satisfied with the engineering part of the Project. According to Dr. K. L. Rao, the team was to visit India again in February, to examine the socio-economic aspects of the project. Did this visit take place and did the examination take place and if so, will the Government be pleased to state what the result of the examination is?

THE HON. THIRU P. U. SHANMUGHAM: I am sorry, Sir. I do not have those details. The hon. Member could ask his party Member to put the question in Parliament.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினால் நமது தமிழகத்திற்கு எவ்வளவு நல்ல வாய்ப்புகள் ஏற்படும், அது சம்பந்தமாக மத்திய அரசு நமக்கு எவ்வளவு பணம் தருவார்கள், மாநில அரசு ஏதாவது பணம் கொடுக்க வேண்டி வருமா இந்தத் திட்டத்திற்கு என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பணத்தைப் பற்றி பிரச்னை இப்பொழுது எழவில்லை. தண்ணீரை பம்பு செய்வதன் மூலம் கொண்டுவர முடியுமா, இல்லையா என்ற பிரச்னை வந்தது. பம்பு செய்ய வேண்டிய அவசியமில்லை. கால்வாய் மூலமாகவே கொண்டுவரலாம். இதைப் பரிசிலனை செய்து, ஆராய்ச்சி செய்து, இறைக்க வேண்டிய அவசியமில்லாமல் கால்வாய் மூலமாகவே கொண்டுவரலாம் காவிரி–கங்கை இணைக்கப்படும்பொழுது என்று பொறி இயல் வல்லுநர்கள் அறிக்கை தந்திருக்கிறார்கள். அதைப் பற்றி மத்திய அரசு பரிசிலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி: சர்க்கார் ஏற்கெனவே இந்தத் திட்டத்தை அங்கீகரித்து இதை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு ஒரு கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறதா? சர்க்கார் இந்த கங்கை-காவிரி இணைப்புத் திட்டத்தை ஆதரிக்கிறது என்று சொன்னால் உடனடியாகப் பெண்ணையாற்றைக் காவிரியோடு இணைக்கக் கூடிய முறையில் சர்க்கார் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது?

1973 ஆகஸ்ட் 7]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: காவிரிக்குத் தண்ணீர் வருகிற பிரச்னை இன்னும் எழவில்லை. இப்பொழுது கொள்கை அளவில் கங்கை-காவிரி இணைப்பு ஏற்றுக்கொள்ளப் மு.
பட்டிருக்கிறது. அதற்கான ஆய்வுகள் நடந்துகொண்டிருக்கின்றன. 9–3
ஆய்வுகள் நடப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. முடிவு பெறவில்லை. முடிவு பெற்ற பிறகு தண்ணீரை எங்கே விடுவது என்பது பற்றியும் அந்த ஆய்வில் முடிவெடுக்கப்படும்.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, இந்த கங்கை–காவிரி இணைப்புத் திட்டம் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. ஆனால் அங்கே இருக்கின்ற ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதைப் போல பிரச்சாரம் செய்து ஆதாயம் தேட முனைகிறார்கள் என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அதுபற்றிய விபரம் எனக்குத் தெரியாது. இந்தத் திட்டம் இன்றைக்கு ஆரம்பிக்கப் பட்டால்கூட முடிவடைவதற்கு 30 ஆண்டு காலமாகும்.

திரு. கே. கந்தசாமி: இந்த கங்கை–காவிரி நீருடன் மேற்குக் கரையில் அதாவது அரபிக் கடலில் போய் வீணாகின்ற நீரையும் இணைத்தால், அந்த நீரையும் கிழக்கே திருப்பி விட்டால் வறண்ட பகுதிகளாகிய மதுரை, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களுக்கு பயன்படும். அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இந்த இணைப்புத் திட்டம் வெற்றிகரமாக நடைபெற்றால் நிச்சயமாகப் பலன் அடையும்.

திரு. ஏ. எம். இராஜா: இந்தத் திட்டம் வெற்றிகாமாக நடைபெற்று முடிந்தால், தமிழ்நாட்டில் எவ்வளவு ஏக்கர் நிலம் அதிகமாகப் பாசன வசதி அடையும்? அதன் மூலம் நாம் செலவு செய்கின்ற தொகையைவிட அதிகமான வருவாய் பெற்று, நல்ல ஆதாயம் இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இந்தத் திட்டத்தைப் பற்றி பொருளாதார அடிப்படையில் கணக்கிட்டுப் பார்த்ததில், சாத்தியமாக இருக்குமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : தலைவரவர்களே, அந்தக் கருத்தரங்கிலே நமது மாநிலப் பொறியாளர்கள் மூன்று கருத்துக்களை வைத்தார்கள் என்று சொன்னார்கள். இந்தக் கருத்துக்களைச் சொல்லும்போது பக்கத்து மாநிலங்களில் உள்ளவர்கள் மறுப்பு ஏதாவது தெரிவித்தார்களா ? அல்லது அவர்களைக் கலந்துதான் இந்தக் கருத்துக்கள் சொல்லப் பட்டனவா ? அல்லது தனிப்பட்ட முறையிலே இந்தக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அரசிடம் இருக்கிற தகவல், இந்தக் கருத்துக்கள் அரசுக்குத் தரப்பட்டன. அரசு இந்தக் கருத்துக்களை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தது. மத்திய அரசு அவை சரியான கருத்துக்கள் என்று ஏற்றுக்கொண்டிருப்பதாகத் தகவல் இருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMAIAH : Sir, as per the present scheme given by Dr. K. L. Rao, after Sreesailam, the Ganga–Cauvery water comes to Chingleput district and again is taken to Mettur Dam which is on a higher level and involves elaborate pumping system. The useful and proper scheme would be to bring the Ganga water through Hosur taluk as the Cauvery flows at the border of Hosur taluk and very close to Hoganekal so that Dharmapuri, Coimbatore and North Arcot districts would be benefited by the water and then again it can be broght to Chingleput district. By this method there will be no waste of time and money. I request the Hon. Minister for Public Works to refer this to the State Engineers for proper and complete investigation. I want to know if this will be done.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, கங்கை–காவிரி இணைப்பு வேலை நடைபெறும்போது, தமிழ்நாட்டில், மேட்டூரில்தான் இணைக்கப்படும் என்று கருத்தரங்கிலே சொல்லப் பட்டது. கல்லணையில் கொண்டுவந்து இணைத்தால், தண்ணீரை 'பம்ப்' செய்யாமலே வாய்க்கால் வழியாக வந்து பாயும் என்று பொறியியல் வல்லுநர்கள் சொல்லியிருக்கிறார்கள்.